# සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව

# சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

# Department of Samurdhi Development

ප්‍රාථමික කර්මාන්ත සහ සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
MINISTRY OF PRIMARY INDUSTRIES AND SOCIAL EMPOWERMENT


| මගේ අංකය<br>எனது இல<br>My No | DSD/HO/14/SS/2/7/7/2019 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | ........................ | දිනය<br>திகதி<br>Date | 2019.06.28 |
|---|---|---|---|---|---|

சகல மாவட்டச் செயலாளர்கள்/மாவட்ட சமுர்த்தி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதிகள்,
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள் ஆகியோருக்கு,

**<u>சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியத்தின் கீழ் "சமுர்த்தி சிப்தொர" புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தினை செயற்படுத்துதல் - 2019/2021 கல்வியாண்டு</u>**

மேற்படி தலைப்பின் கீழ் தற்போது வெளியிடப்பட்ட 2019/05/02 ம் திகதியிடப்பட்ட சமுர்த்தி திணைக்கள சுற்றறிக்கை (சமூக பாதுகாப்பு) இலக்கம் 04/2019 இன் மூலம் இந்த வேலைத்திட்டங்களை செயற்படுத்த வேண்டிய விதம் தொடர்பில் ஆலோசணைகள் வழங்கப்பட்டுள்ளன.

02. எவ்வாறு இருந்தும் இவ்வாண்டில் செயற்படவுள்ள இந்த சிப்தொர புலமைப்பரிசில் வேலைத்திட்டம் கீழுள்ள பிரகாரம் 03 கட்டங்களுக்கமைய மேற்கொள்ளப்படவுள்ளது.

i. 2019/2021 கற்கையாண்டினைப் போன்று 2017/2019 மற்றும் 2018/2020 கற்கையாண்டுகளின் பொருட்டும் நேர்முகப்பரீட்சையில் கலந்து கொண்ட சகல மாணவர்கள், மற்றும் ஏதேனும் காரணம் ஒன்றின் அடிப்படையில் விண்ணப்பிக்க முடியாமல் போன சகல பயனாளிக் குடும்பங்களின் க.பொ.த (உ.த) கற்கின்ற மாணவர்களின் பொருட்டு அவர்களது கல்வியாண்டுகளின் முன்வரும் வருடங்களுக்கான சிப்தொர சிப்தொர புலமைப்பரிசிலகளை வழங்குதல். அப் பெயர்ப்பட்டியலை மாவட்டப் பணிப்பாளரால் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் பிழையின்றி தயாரித்து 2019.07.20ம் திகதிக்கு முன்னர் மாவட்டச் செயலாளரின் அங்கீகாரத்துடன் தலைமைக் காரியாலயத்தின் சமூக பாதுகாப்புப் பிரிவுக்கு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டியதுடன் Unicode பயன்பாட்டில் (சிங்கள மொழி –

Unicode - Iskolapotha - Ms Office excel) தமிழ் மொழியில் Unicode kalaham தமிழ் மொழியில் Unicode – Kalaham – Ms Office Exel செயற்படுத்துதல் கீழுள்ள முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகவும் கிடைக்கச் செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். ssfsamurdhi@yahoo.com (இணைப்பு 03 படிவத்திற்கமைய) மேலும் இணைப்பு இலக்கம் 04 இன் பிரகாரம் அறிக்கையொன்றினை மேற்படி மின்னஞ்சல் முகவரிக்கு தபாலிலும் அனுப்பப்படல் வேண்டும்.

ii. இங்கு 2017/2019 கல்வியாண்டின் பொருட்டு 2019 ஜுலை முதல் ஆகஸ்ட வரையிலான 02 மாதங்களுக்கும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல், மற்றும் 2018/2020 கல்வியாண்டிற்குறியதாக 2019 ஜுலையிலிருந்து 2020 ஆகஸ்ட வரையிலான காலத்திற்கும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

iii. 2019/2021 கல்வியாண்டுகளின் பொருட்டு இதுவரையில் சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிக் குடும்பங்களின் க.பொ.த(உ.த) கற்பதாக உறுதிப்படுத்திக் கொள்ளும் சகல பிள்ளைகளுக்கும் (2019.05.02ம் ம் திகதியிடப்பட்ட சமுர்த்தி திணைக்கள சுற்றறிக்கை (சமூக பாதுகாப்பு) இலக்கம் 04/2019 இன் பிரகாரம் குறிப்பிட்ட திகதியில் அதாவது 2019.07.28ம் திகதியில் தலைமைக் காரியாலயத்திற்கு பெயர்ப்பட்டியலை சமர்ப்பித்தல்)

iv. புதிதாக சமுர்த்தி நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் முதலாம் சுற்றின் பொருட்டு இதுவரையில் சமுர்த்தி நிவாரண உரித்து கிடைக்கப்பெற்ற குடும்பங்களின் க.பொ.த(உ.த) கற்கும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில்களை வழங்குதல்.

இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள DDD/HO/14/1 என்ற இலக்கமும் 2017.01.24ம் திகதியின் கடிதத்தின் 05ம் இலக்கப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள “சமூக பாதுகாப்பு நிதியத்தின் அங்கத்துவம் கிடைக்கப்பெறுவது நிவாரணம் கிடைக்கப்பெற்று 03 மாதங்கள் கடந்ததன் பின்னராகும்” என வழங்கப்பட்டிருந்த ஆலோசணைகள் இதன்மூலம் செல்லுபடியற்றதாக ஆவதுடன் சமுக பாதுகாப்பு நிதியத்தின் அங்கத்தவரானவர் புதியதாக சமுர்த்தி நிவாரண உரித்து கிடைத்த நாளிலிருந்து உரித்துடையதாகும். அப்பந்தியின் ஏனைய பிரிவுகள் உள்ளவாறே அமுலிலிருக்கும்.

மேலும் இரண்டாம் சுற்றின் மேன்முறையீடுகளின் அடிப்படையில் சமுர்த்தி நிவாரணத்தின் பொருட்டு தெரிவு செய்யப்படுகின்ற குடும்பங்களின் க.பொ.த (உ/த) கல்வி பயிலும் மாணவர்களின் பெயர்ப்பட்டியலை சமுர்த்தி சிப்தொர புலமைப்பரிசிலை வழங்கும் பொருட்டு தலைமைக் காரியாலயத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. மாவட்டச் செயலக மட்டத்திலும் பிரதேச செயலக பிரிவு மட்டத்திலும் மேற்சொன்ன புலமைப்பரிசில்களை வழங்குகுதல் மற்றும் விழிப்பூட்டல்களை மேற்கொள்ளும் வேலைத்திட்டங்களை நடாத்துவதற்குறிய ஆலோசனைகள் எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை வினயமுடன் அறியத் தருகின்றேன்.

சிப்தொர புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தின் வெற்றியின் பொருட்டு தாங்கள் உட்பட்ட பணியாளர்கள் வழங்கும் ஒத்துழைப்பினைப் போற்றி மதிக்கின்றேன்.

எஸ். ஈ. ஆர். ரீ. எம். எஸ். பீ. பண்டார
பணிப்பாளர் தலைமையதிபதி

**பிரதிகள்**

1) செயலாளர் - ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலவூட்டல் அமைச்சு – த.கூ.க. பொருட்டு

2) சகல பிரதேச செயலாளர்கள் - மேற்படி ஆலோசனைகளைப் பின்பற்றி பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் சிப்தொர புலமைப் பரிசில் வேலைத்திட்டத்தை செயற்படுத்தவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு

3) கணக்காளர் - மாவட்டச் செயலகம் - த.கூ.க. பொருட்டும் உ.ந. பொருட்டும்

4) சகல பிரிவுத்தலைவர்கள் - த.கூ. க. பொருட்டும் உ.ந. பொருட்டும்.

Translated by :- M.M.M. Jawhar (Translator)